இந்த "நேரம்"
எந்த நாளும் வாழும்
CITIZEN
கைக்கடிகாரங்கள்
° புதிய டிசைன்கள்
° அழகிய அமைப்பு
பல வர்ணங்களில் கிடைக்கின்றன
நேரடிஇறக்குமதியாளர்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 புரட்டாதி 14 ஷவ்வா: 26 இதழ்: 231
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 30-9-78

வீட்டில் அவசியம்
இருக்கவேண்டியது
தேமோஸ் ∴பிளாஸ்க்
THERMOS
உங்களுக்கும் தேவை
மலிவு விலையில் பெற
இன்றே நாடுங்கள்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

# 34 நாட்கள் பதவி வகித்த புதிய பாப்பரசர் காலமானார்!

## கத்தோலிக்க மக்களுக்கு மீண்டும் பேரதிர்ச்சி

(வத்திக்கான்)

உலகின் 70 கோடி கத்தோலிக்க மக்களின் ஏகதலைவர் புனித பாப்பரசர் முதலாவது அருளப்ப சின்னப்பர் நேற்றிரவு மாரடைப்பால் காலமானார் என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் அறியத் தருகிறோம்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி புதிய பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்ட இவருக்கு இறக்கும்போது வயது 65.

பாப்பரசரின் அந்தரங்கச் செயலாளர் திரு. ஜோன் நாகி நேற்று அதிகாலை அவரது படுக்கையறைக்குச் சென்றபோது பாப்பரசர் படுக்கையிலேயே உயிர் பிரிந்த நிலையில் காணப்பட்டார்.

படுக்கையறையின் விளக்குகள் எதுவும் அணைக்கப்படாதிருந்ததாகவும் புத்தகம் ஒன்றை வாசிப்பதுபோன்ற நிலையில் பாப்பரசர் இறந்துகிடக்கக் காணப்பட்டார் என்றும் அவரது உதவியாளர் தெரிவித்தார்.

நேற்று அதிகாலைப் பூஜைக்கு பாப்பரசர் வராததை அடுத்து அந்தரங்கச் செயலாளர் அவரது அறைக்குச் சென்று பார்த்தபோதே அவரது மரணம் பற்றி அறிந்துகொண்டார்.


பாப்பரசரின் உடலைப்பரிசோதனை செய்த டாக்டர்கள், பாப்பரசர் நேற்றிரவு 11 மணிக்கு (இலங்கை நேரப்படி நேற்றுக்காலை 2-30 மணி) மாரடைப்பால் காலமானார் என்றும் தெரிவித்தனர்.

### மக்கள் கதறி அழுதனர்

இலங்கைநேரப்படி நேற்றுக்காலை 9-30 மணிக்கு பாப்பரசரின் மரணச்செய்தி அறிவிக்கப்பட்டபோது அச்செய்திகேட்டு சென்பீட்டர்ஸ் சதுக்கத்துக்கு விரைந்த பெருந்திரளான மக்கள் கண்ணீர்விட்டுக் கதறி அழுதனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### 34 நாட்களே பதவிவகித்தார்

கடந்த ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி தெரிவுசெய்யப்பட்டு மிகவும் எளியமுறையில் பதவி ஏற்று 34 நாட்களே பாப்பரசராகப் பதவி வகித்த அருளப்ப சின்னப்பரே கடந்த மூன்று நூற்றாண்டுகளில் குறுகிய காலம் பதவிவகித்தவராவார்.



### சென். பீட்டர்ஸ் தேவாலயத்தில் பொதுமக்கள் கண்ணீர் அஞ்சலி

மறைந்த பாப்பரசரின் பூதவுடல் சிவப்பு வெள்ளை அங்கி அணிந்து சென்பீட்டர்ஸ் தேவாலயத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது,

பெருந்திரளான மக்கள் கண்ணீருடன் சென்று பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்திவருகின்றனர்.

இறுதிச் சடங்குகள் அடுத்தவாரம் நடைபெறும் என்றும் இன்னும் திகதி தீர்மானிக்கப்படவில்லை என்றும் வத்திக்கான் கர்தினால் ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளையில் புதிய பப்பரசரை தேர்ந்தெடுப்பதற்காக கத்தோலிக்க கர்தினால்கள் அக்டோபர் 13ம் திகதி முதல் 18ம் திகதிவரை வத்திக்கானில் கூடுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. [இ]

---

புத்தூர் கொலை முயற்சி:

## 1-ம் எதிரிக்கு 18 மாதம்; 2-ம் எதிரிக்கு 3 வருடம்

யாழ்ப்பாணம்)

புத்தூர் கொலைமுயற்சி வழக்கில் 1-ம் எதிரிக்கு 18 மாதக் கடுழியச்சிறைத்தண்டனையும், 2-ம் எதிரிக்கு 3 வருடக் கடுழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதியரசர் ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில்நடைபெற்றது.

இவ்வழக்கில் புத்தூரில் 76 அக்டோபர் 11ம் தேதி சின்னவன் கிட்டிணன், கந்தன் வல்லிபுரம் ஆகியோர் சுடலை வயிரமுத்துவை கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

ஜூரிசபையினர் 5—2 ஆகப் பிரிந்து தீர்ப்பளித்தனர். (சு)

---

## துப்பாக்கி முனையில் கார் கடத்தல்!

(மூதூர்]

பட்டப்பகலில் துப்பாக்கி முனையில் சாரதியை மிரட்டி தாக்கிக் காயப்படுத்தி கார் ஒன்றைக் கடத்திச் சென்ற சம்பவம் மூதூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதை அடுத்து மூதூரின் சகல பகுதிகளிலும் பொலிசார் தேடுதல்வேட்டையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பிரஸ்தாப சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:-

மூதூர் தோப்பூரைச்சேர்ந்த ஜனாப் காலிமுகம்மது என்பவருக்குச் சொந்தமான காரை அதன் சாரதி திரு. முருகப்பன் மூதூர் வைத்தியசாலைக்கு முன்னால் நிறுத்தி இருந்தார். அச் சமயம் முன்பின் அறிமுகமில்லாத ஒருவர் சாரதியிடம் சென்று தோப்பூரில் ஒரு காயமுற்ற நோயாளி இருக்கிறார் என்றும் அவரை உடனடியாக மூதூர் வைத்தியசாலைக்கு கொண்டுவரவேண்டும் என்றும் கேட்டு காரை வாடகைக்கு அமர்த்திச்சென்றார்.

கார் புறப்பட்டு மூதூரில் இருந்து சுமார் நான்கு மைல்களுக்கு அப்பாலுள்ள விகாரைத் தோட்டம் இருதயபுரத்தைத் தாண்டும்போது பிரஸ்தாபநபர் காரை நிறுத்தும்படி கூறினார்.

கார் நிறுத்தப்பட்டவுடன் ஏற்கனவே அவ்விடத்தில் தயாராக நின்ற இன்னும் இருவர் காரில் ஏறிக்கொண்டனர்.

அடுத்து முதலாவது நபர் கைத்துப்பாக்கியால் சத்த வெடி வைத்து சாரதியைப் பயமுறுத்தித் துப்பாக்கியாலும் காலாலும் கைகளாலும் சாரதியைத் தாக்கி காரைவிட்டு வெளியேதள்ளிவிட்டு மூவருமாகக் காரைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இதையிட்டு மேற்படி சாரதி திரு. முருகப்பன் மூதூர் பொலிசில் புகார் செய்துள்ளார்.

விசாரணை தொடர்கிறது. (இ)

---

பருத்தித்துறை சம்பளப்பணம் கொள்ளை:

## 10 சந்தேக நபர்களும் ஆஜர் செய்யப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மகளிர் கல்லூரி ஆசிரியைகளின் சம்பளப் பணம் கொள்ளை தொடர்பாக ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை பிணையில் விடுமாறு சந்தேகநபர்களின் சட்டத்தரணிகள் வாதாடினார்கள்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் நேற்றுக்காலை இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்குத் தொடர்பாக ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ள 10 சந்தேகநபர்களும் நேற்று நீதிமன்றம் கொண்டுவரப்படவில்லை.

கோர்ட்டிற்கு உள்ளேயும், வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர். (இ)

---

## மாங்குளம் ரயில் துப்பாக்கிச் சூடு: அக்டோபர் 31-ல் தீர்ப்பு

(கிளிநொச்சி)

மாங்குளம் ரயில் துப்பாக்கிச்சூடு தொடர்பான விசாரணைகள் முடிவடைந்துள்ளன.

இவ்விசாரணையின் தீர்ப்பு எதிர்வரும் அக்டோபர் 31-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது

[6ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

4 சிறி இற்ருலியன் லம்விருற்ரு ஸ்கூட்டர். தொடர்பு: வ. க. சம்பந்தன், மலைவேம்படி, சுதுமலை தெற்கு, மானிப்பாய். 0432

6 ஸ்ரீ 2000 தொடர் பேஜோ கார் சவ்வரி (Safari model) உடனே விற்பனைக்கு உண்டு. ஒக்டோபர் 1-ந் திகதி தொடக்கம் பார்வையிடலாம். 125, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 0454

உடுவில் சித்தாவத்தை 24 பரப்பு தென்னங் காணி. தொடர்பு கொள்ளும் விலாசம்: திரு. செல்வத்துரை தருமரத்தினம், மருதனுமடம். 0417

பரந்தன் — முல்லைத்தீவு றோட்டில் அருகாமையிலிருக்கும் தேவிபுரத்தில் 20 ஏக்கர் தென்னைக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு வே. சுப்பிரமணியம், 85 கதிரவேற்பிள்ளை வீதி, புலோலி மேற்கு, பருத்தித்துறை. 0444

### தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் 5 பரப்புக் காணி வீட்டுடன் அல்லது 10 அல்லது 15 பரப்பு வெறுங்காணி பிரதான வீதியோரத்தில் தேவை. உடனடியாக கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 0439, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 0439

15 அல்லது 20 பரப்புக் காணி திருநெல்வேலி சுற்றுடலில் பிரதான வீதியோரத்தில் தேவை. உடனடியாக கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 0440, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 0440

கேற் கிறில் வேலையில் அனுபவமுள்ள எலக்ரிக் வெல்டர் இருவர் தேவை. திங்கள் நேரில் சந்திக்கவும். சி. சுப்பையா, சாரையடி, புலோலி. 0450

அனுபவமும் திறமையும் வாய்ந்த வெல்டேர்ஸ், ரின்கேர்ஸ், பெயின்டேர்ஸ் உடனடியாக தேவை. திறமைக்கேற்ப வேதனம் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும். 77, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 0449

### பயிற்சி

Radio Officers Course. Postmaster Generals Certificate (General and Special) ஆறுமாதப் பயிற்சி மூன்று வருடம் கப்பலில் வேலை செய்த அனுபவம் உடைய ஆசிரியர்களால் வழங்கப்படும் பயிற்சி பெற விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். க. இராசரத்தினம், இளைப்பாறிய தபால் அதிபர், கொழும்பு றேடியோ, கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பளை. 0447

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# இளவாலை சென்.ஹென்றிஸ் அகில இலங்கை சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைப் பாடசாலைகளின் 12 வயதுக்குட்பட்டோரின் உதைபந்தாட்டப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி சாம்பியனாகியுள்ளது.

இப்போட்டியின் ஆரம்பத்தில் ரி. பி. ஜயா மகாவித்தியாலயத்தை கொழும்பில் 6-1 கோல்களாலும் மன்னாரில் புனித சவேரியர் கல்லூரியை 6-0 கோல்களாலும் தோற்கடித்து பின்னர் கொழும்பில் நடைபெற்ற கால் இறுதியாட்டத்தில் வென்னப்புவ யோசேவ் வாஸ் கல்லூரியை 6-0 கோல்களாலும், அரை இறுதி ஆட்டத்தில் நீர் கொழும்பு சென். மேரிஸ் கல்லூரியை 4-0 கோல்களாலும் இறுதி ஆட்டத்தில் குருநாகல் லக்தாச மகாவித்யாயத்தை 8-0 கோல்களாலும் தோற்கடித்து சாம்பியனாகி சிங்கக் கேடயத்தை சுவீகரித்துக்கொண்டது.

செல்வன் பிலிப்சந்திரகுமார் இக்கோஷ்டிக்கு தலைமை தாங்கினார். முதல் தடவையாக 1976-ல் நடைபெற்ற இப்போட்டியிலும் புனித ஹென்றியரசர் கல்லூரியே சாம்பியனானது. என்பது குறிப்பிடத்தக்கது.

15 வயதுக்கு உட்பட்டோருக்கான போட்டியிலும் கால் இறுதியாட்டத்தில் பங்குபற்ற புனித ஹென்றியரசர் கல்லூரி தகுதிபெற்றுள்ளது. இப்போட்டிகள் எதிர்வரும் 7ம், 8ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளன.

(இ)

## ஹொக்கிப் போட்டிகள்

(அரியாலை)

யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், பரி. யோவான் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற ஹொக்கிப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரிக் கோஷ்டி 3-0 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும், பரி யோவான் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற முதலாம் பிரிவு ஹொக்கிப் போட்டியில் 3-1 கோல்களால் யூனியன் கல்லூரிக் கோஷ்டி வெற்றியீட்டியது. இரண்டாம் பிரிவு ஹொக்கிப் போட்டியில் 1-0 கோலால் பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டி வெற்யீட்டியது இப்போட்டிகள் பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

(அ)

## வெற்றி

(யாழ்ப்பாணம்)

சுளிபுரம்விக்ரோறியாக் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக்கல் கல்லூரி 3 வது பிரிவில் 6-1 கோல்களாலும் 2-ம் பிரிவில் 2-1 கோல்களாலும் வெற்றி பெற்றது முதலாவது பிரிவு எக்கோஷ்டிக்கும் வெற்றி தோல்வியின்றி (2-2) முடிவடைந்தது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைததானத்தில் போட்டிகள் நடைபெற்றன.

(இ)

## அறிவித்தல்
## மின்சாரத் தடை

இலங்கை மின்சார சபையினரால் சில அத்தியாவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதால், 01-10-1978 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணியிலிருந்து மாலை 5-00 மணி வரையும் 1. மனோகரா, 2. மாவடி, 3 கன்னாதிட்டி, 4 கலட்டி, பிறவுண் வீதி உப மின் நிலையங்களிலிருந்து மின் விநியோகம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பது முன்கூட்டியே இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

க. சிவஞானம்,
ஆணையாளர்.
யாழ். மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
28-09-1978. 0458

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற புன்னாலைக் கட்டுவனைச்சேர்ந்த வல்லிபுரம் கந்தப்பிள்ளை என்பவரின் மரண சாதன விடயத்தில்

மரணமெய்தியவர்

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை நவரத்தினராசவேல்

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்
இல. த. 3395

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 6-ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

1978 புரட்டாதி 28இல்

0452

## வரணி கிராமாட்சி மன்ற
## கேள்வி விளம்பரம்

வரணி கிராமாட்சி மன்ற விசேட ஆணையாளரால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து பதிவுத் தபால் மூலம், வரணி வடக்கு 4ம் கட்டையடியிலிருந்து சிமிழ் அம்மன் கோவில் போகும் றோட்டு வேலைக்கு கேள்வி விண்ணப்பங்கள் 11-10-78 காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பதாரர் கேள்விப் பணமாக ரூபா 100/-ம் பத்திரப் பணம் ரூபா 15/-ம், 10-10-78 பகல் 12 மணிவரை காரியாலயத்தில் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். பத்திரப்பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது. விண்ணப்பகாரர் கேள்விப்பத்திரம் திறக்கப்படும்போது சமுகமளிக்கலாம். இன்னும் மேலதிக விபரங்கள் கிராமசபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

அ. ம. ம. குலநாயகம்,
விசேட ஆணையாளர்,
வரணிக்கிராமசபை.

கிராமாட்சி மன்றம்,
வரணி, 26-9-78.

0456

# சமூகக்குறைபாடு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைக்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களிடையே நிலவும் சமூகக்குறைபாட்டினை ஒழிப்பதற்கான சகல சமூகக்குறைபாடு ஒழிப்புத்திட்ட நடவடிக்கைகளுக்கும் வலி-கிழக்கு சனசமூகநிலையங்களின் சமாஜம் பூரண ஒத்துழைப்புகளைக் கொடுப்பது என முடிவுசெய்துள்ளது.

மேற்படி தீர்மானத்தோடு இச்சமாஜத்தின்கீழ் இயங்கும் சனசமூகநிலையங்கள் மூலமாகச் சமூகக்குறைபாடுகள் ஒழிப்புக்கான பிரசாரங்களை மேற்கொள்வது என்றும் இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி சமாசத்தின் தலைவரான, கோப்பாய்க் கிறீஸ்தவக் கல்லூரியின் முன்னாள் தலைமையாசிரியையும், பொதுசன சேவகியுமான திருமதி வேதவல்லி கந்தையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி தீர்மானங்களோடு பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன:

"சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படும் உதவி நன்கொடைகளை அரசாங்கம் அதிகரிக்கவேண்டும். அத்துடன் சனசமூகநிலையங்கள் சிறந்த முறையில் தொழிற்படுவதற்கான நடவடிக்கைகளைச் செய்துதரவேண்டும்.

"சனசமூக நிலையங்களுக்கு மின்சார வசதியை இலவசமாக வழங்குவதற்கான நடவடிக்கைகளை அவ்வப்பகுதி உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொள்ளவேண்டும்.

"சனசமூக நிலையங்கள் வாசிகசாலைகள் தமது சொந்த முதலீட்டில் கட்டிடங்களைப் பொதுக்காணிகளில் கட்டியிருந்தால் அக்காணியை இலகுவான முறையில் அந்த நிறுவனங்களுக்குச் சொந்தமாக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்".

"வீடுகட்டுவதற்கான வட்டியில்லாக் கடன் கொடுக்கும் விண்ணப்பங்களை அவ்வப்பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு ஊடாக வழங்கப்படவேண்டுமென்றும், அவ்விண்ணப்பங்களைச் சிபார்சு செய்யும் பொறுப்பும் சனசமூக நிலையங்களிடம் அளிக்கப்படவேண்டும்."

## கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இன்று, 6 வீரர் ஆட்டத்தில்- தையிட்டி ஈஸ்வரி வி. க. 'பி', பன்னாலை சிவசக்தி வி. க., நீர்வேலி மத்திய இளைஞர் வி. க. 'பி', கதிரிப்பாய் முரசொலி வி. க. 'பி' ஆகியனவும், 4 வீரர் ஆட்டத்தில்- கால் இறுதிப் போட்டிகளில்- சிறுப்பிட்டி உதயதாரகை வி. க 'ஏ'. சிறுப்பிட்டி ஜனசக்தி வி. க., இமையாணன் கலைமகள் வி. க., தொண்டமானாறு கலைவாணி வி. க. 'ஏ', அச்சுவேலி ஐக்கிய வி க., தொண்டமானாறு கலைவாணி வி க. 'பி' ஆகியனவும் மோதவிருக்கின்றன.

### முடிவுகள்

நேற்றுமுன்தினம் நடைபெற்ற 6 வீரர் ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய வி க. 'ஏ', வல்வை திருவில் வி.க. 'ஏ' ஆகியனவும் 4 வீரர் ஆட்டத்தில் அச்சுவேலி ஐக்கிய வி. க., நீர்வேலி ஸ்ரார் வி. க., இமையாணன் கலைமகள் வி. க., ஆவரங்கால் சரஸ்வதி ச. ச. நி ஆகியனவும் வெற்றிபெற்றுள்ளன.

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE
Courses in (i) Welding
(ii) Advanced Welding.
Commence on 1st November, 1978.
Applications close on 20 th October 1978.
Prospectus with application forms are availab e at the office at 50 cts each.
Director,
Jaffna College Technical Institute,
Vaddukoddai.
0455

சாவகச்சேரி இந்துக்கல்லூரி
பெற்றோர்-ஆசிரியர் சங்க
**ஆண்டுப் பொதுக் கூட்டம்**

அன்புடையீர்,

மேற்படி கூட்டம் 07-10-78 சனிக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு அதிபர் திரு. பூ. வெற்றிவேலு அவர்களின் தலைமையில் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெறும். பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும்படி வேண்டுகின்றேன்.

குறிப்பு:- அங்கத்தவர்கள் பிரேரணைகள் எழுத்து மூலம் 05-10-78க்கு முன் செயலாளருக்கு அனுப்பவும்.

மு. கதிரேசு,
செயலாளர்.

0457

**யமஹா**
**மீனவர்களை அழைக்கிறது**
இப்பொழுதுதான் வந்து சேர்ந்துள்ளன
8 AK, 8 BK, P 125 AKL, P 250, E 15 AKL
மொடல் அவுட்போட் மோட்டர்களுக்குரிய
சகல கிராங்க் உதிரி உறுப்புகளும்
சொற்ப கையிருப்பே உள்ளதால்
தேவைக்கு முந்துங்கள்
**கொன்சலிடேட்டட்**
**என்ஜினியரிங் கொம்பனி**
101, கியூ றேட், கொழும்பு-2.
தொலைபேசி: 35464, 35009
தந்தி- "கெறேமறின்" கொழும்பு. 0460

ஈழநாடு
The Eelanaadu

# "மனித சமுதாய முன்னேற்றத்துக்கு பெரியாரின் 'அறுவைசிகிச்சை தேவை!

## சீதனக்கொடுமை மூலம் பெண்களை சந்தைப் பொருள்களாக்காதீர்கள்!"

### யாழ். நகரில் கடலூர் வீரமணி

(யாழ்ப்பாணம்)

''அரசியல் வேற்றுமையின்றி, சாதி ஒழிப்பு முறைக்கு எதிராக ஒன்றுபட்டுத் தமிழர் சமுதாயத்தைச் சீர்படுத்த இளைஞர்கள் முன்வரவேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக, இளைஞர்கள் கலப்புத் திருமணங்களைச் செய்யவேண்டும். ஒருவரை ஒருவர் மதித்துச் சமத்துவமாக நடவுங்கள். சுயமரியாதையின்றி, சுய இராச்சியம் பயனில்லை. ஆதிக்கம் என்பது தாம் அனுபவித்த சலுகைகளை மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்காமையே யாகும். இவ்வடிமைத்தனம் எங்கிருந்தாலும் அடியோடு அழித்து விட, அகற்றிவிட இளைஞர்கள் முன்வரவேண்டும்.''

இவ்வாறு, புதன்கிழமை மாலை யாழ். திறந்தவெளியரங்கில் திரு. இரா. பற்குணம் தலைமையில் திருக்குறள் முன்னணிக் கழகத்தால் பெரியார் ஈ. வெ. ரா.வுக்கு எடுக்கப்பட்ட நூற்றாண்டு விழாவில், தமிழ்நாடு திராவிடர் கழகப் பொதுச் செயலாளரும், பெரியாரின் தொண்டருமான கடலூர் கி. வீரமணி குறிப்பிட்டார்.

இவ்விழாவில், யாழ். எம். பி. திரு. வெ.யோகேஸ்வரன், வண்ணை ஆனந்தன், செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம், ஆசிரியர் திரு அ. பொ. செல்லையா, சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம், தமிழ்நாடு திராவிடர்கழகத் தொண்டர் திருமதி பார்வதி கணேசன் ஆகியோரும் பங்கு கொண்டு உரையாற்றினர். திரு. வீரமணி தமதுரையில் மேலும் கூறியதாவது:

#### ஒடுக்கப்படும் மக்கள் வழிகாட்டி

''பெரியார், தமிழகத்திற்கு மட்டும் உரியவரல்ல. எங்கெங்கு ஆதிக்கவாதிகளின் கொடுமைகள் உண்டோ, அங்கெல்லாம் பெரியார் ஒடுக்கப்படும் மக்களின் வழிகாட்டியாக உலகளாவி நிற்கின்றார். பெரியார், தமிழுலகிற்குப் பகுத்தறிவுப் பகலவனாக, தமிழா சமுதாயத்தில் புரையோடிப்போயிருக்கும் மூடநம்பிக்கைகளைச் சுட்டெரிக்கிறார். மானமுள்ள, சமத்துவமுள்ள புதிய சமுதாயத்தை உருவாக்கத் தமிழர்களுக்காகத் தமது சுக போகங்களையும், வாழ்க்கையையும், அரசியல் பதவிகளையும் விட்டுவந்து, தனியாகத் துணிச்சலோடு 65 ஆண்டுகளுக்கு முன் சுயமரியாதை இயக்கத்தை நிறுவினார். இப்பகுத்தறிவு இயக்கம், இன்று இந்தியாவில் மட்டுமின்றி, இலங்கை, இங்கிலாந்து போன்ற கடல் கடந்து தமிழர்கள் வாழும் இடங்களில் மட்டுமின்றி, சுவீடன், அமெரிக்கா போன்ற உலக நாடுகளுக்கும் பரவி, உலகளாவிய இயக்கமாகவுள்ளது. பெரியார், 20ம் நூற்றாண்டின் ஒப்பற்ற சுயசிந்தனையாளராக விளங்குகிறார்.

#### ஈழத்துக்கும் பெரியார் தேவை

''நான் இலங்கைக்கு வரும் முன்னர், பெரியார் வட இந்தியாவுக்குத்தான் தேவைப்படுகிறார் என்றிருந்தேன். ஆனால் இலங்கைக்கு முதல் முறையாக வந்த நான், ஒரு மாணவனைப்போல் இங்கு இருந்துகொண்டு, இங்குள்ள சமுதாய அமைப்புகளை அறியும்போது வருத்தப்படுகிறேன் தீண்டாமை, சாதித்தடைகள், சீதனக் கொடுமை போன்றவற்றை இங்கு கண்டேன். எனவே இந்நாட்டவருக்கும் பெரியார் மிகவும் தேவைப்படுகிறார்.

''அறுவைச் சிகிச்சை மூலம் பெரியார் சமுதாயத்தில் புரையோடிய பிணிகளையும், நாற்றமெடுத்த கறைகளையும் அகற்றத் தன் பகுத்தறிவு ஒளியைச் செலுத்தினார். பெரியாரின் சமுதாய அறுவைச் சிகிச்சையின் நோக்கம், மனித சமுதாயம் தன்மானமுள்ளதாக வாழவேண்டும் என்பதே. அவரது 'சிகிச்சை' மக்களுக்குத் தேவைப்படுகிறது.

''தன்மானமுள்ளவர்களாக வாழ்வதற்கு முதலில் அச்சம் இருக்கக்கூடாது. தன்னம்பிக்கை வேண்டும். மனிதனை மனிதனை மதிக்கும் பகுத்தறிவுநிலை வேண்டும். அச்சப்பட்டு, தன்னம்பிக்கையற்று, பகுத்தறிவினைப் பயன்படுத்திக்கொள்ளாது வாழ்ந்தமையால்தான் தமிழர் எல்லாத் துறைகளிலும் அடிமைகளாகி விட்டார்கள். பெரியார், சமுதாயத்தில் காணப்பட்ட மூடநம்பிக்கைகளைத் தயவுதாட்சண்யமின்றி எதிர்ப்புக்காட்டி கிளர்ச்சிகள்செய்து, பிரசாரஞ்செய்து, எழுதிவந்தார்; செயல்பட்டுவந்தார்.

#### பெரியார் ஒரு சுய சிந்தனையாளர்

''பெரியார் அரசியலைவிட்டு விலகிச் சாமானிய மக்களின் குரலாக நின்று, சாமானிய மனிதனாக வாழ்ந்து, சுயசிந்தனையாளராக விளங்கினார். பெண்ணடிமை முறையை எதிர்த்துப் போராடினார். இந்திய தேசியக் காங்கிரஸ்கட்சியின் மதுவிலக்குப் பிரசாரத்தின்போது, பெரியார் தமது குடும்பத்திலுள்ள பெண்களைக் கூட்டிவந்து, கள்ளுக்கடைகளுக்கு முன் இருத்தி மறியல் செய்தார். இதுவேஇந்தியாவில் பெண்கள் போராட்டத்தில் முதல்முதலாக ஈடுபட்ட நிகழ்ச்சியாகும். கதர்இயக்கத்தினுக்கு ஆதரவாக தாமே கதராடையை வாழ்நாள் முழுவதும் அணிந்ததோடுமட்டுமின்றி பொதிகளாகக்கட்டி தானே தோள்களில் சுமந்து கொண்டுபோய் சந்தைக்குச் சந்தையாக விற்றார். கேரளத்தில் கீழ்சாதி என்று ஒதுக்கிய குலத்தவரான ஒருவர்வழக்கறிஞராகி கோயில் வீதியிலுள்ள நீதிமன்றத்துக்குக் கோயில் வீதி வழியாகச் சென்றமைக்காக உயர்சாதியினரால் தாக்கப்பட்டமையால் பெரியார் இதற்கு எதிராகக் கிளர்ச்சிசெய்து இருமுறை சிறை சென்றார். தேசிய குருகுலத்தில் கல்விகற்ற மாணவர்களுக்குச் சாதியின் பெயரால் செய்யப்பட்ட கொடுமைகளை அறிந்து பார்ப்பனர் ஆதிக்கத்துக்கு எதிராகப் பெரியார் கொண்டுவந்த தீர்மானத்தை தேசிய காங்கிரஸினர் காஞ்சிபுர மகாநாட்டில் புறக்கணித்தமையால் பெரியார், காங்கிரஸ்கட்சியையும், அரசியலையும் விட்டு வெளியேறி சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்தார்.

#### "கடவுளின் மக்கள்"

பெரியார் ஹரிஜனம் என்னும் பதத்தையே வெறுத்தார். சாதிப்பிரிவினைக்கு ஆதாரம் காட்டும் சொற்களையோ, நூல்களையோ, மக்களையோ மேடைகளிலும், பத்திரிகைகளிலும் சிரிக்கும்படி பேசியும் எழுதியும் பொது மக்களைச் சிந்திக்கச்செய்தார். பிராமணாள் ஹோட்டல்கள் என்னும் பெயர்ப் பலகைகள், பெரியார் எதிர்த்து நடாத்திய கிளர்ச்சியால் மறைந்து இன்று மீண்டும் தலைதூக்கி உள்ளன தமிழகத்தில். நான் தமிழகத்தைவிட்டு இலங்கைக்கு வரும்பொழுது இத்தகைய ஹோட்டல்கள்முன் கிளர்ச்சிகளை மீண்டும் செய்வோம் எனக்கூறி அறிக்கை விட்டேவந்தேன். இலங்கையில் நான் இருக்கும் பொழுதே இவ்வாறான பெயர்ப்பலகைகளை வாபஸ் பெறுகின்றோம் என்று தமிழகத்தில் உள்ள ஹோட்டல் உரிமையாளர்கள் பத்திரிகைகளுக்கு அறிக்கைவிட்டுள்ளனர்.

''எங்கள் நாட்டில் அழிந்து போய்க்கொண்டிருக்கும் சீதனக்கொடுமை, இலங்கைத் தமிழரிடம் ஒருவரின்தகுதியை அளவிடும் அளவுக்கு மேலோங்கி, மனிதவாழ்க்கையில் பெண்களை சந்தைப் பொருளாக்கிவிட்டதை அறிந்து இளைஞர்கள்வேதனைப் படவேண்டும். இது சுயமரியாதை உள்ள மனிதனின் செயலாகக்கொள்ளமுடியாது. சுயமரியாதை இன்றி சுய இராஜ்யம் பயன்தராது, ஆதிக்கச்சக்திகளின் கீழ்ப் படவேவைக்கும்.

#### பரிசோதனைக் குழந்தை பற்றி பெரியார்

''சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் ''இனிவரும் உலகம்'' என்னும் நூலில் பெரியார் இன்று விஞ்ஞானத்தின் புதுமையான ''பரிசோதனைக் குழந்தை'' பற்றி கூறினார். இதற்குக் காரணம் பெரியாரிடம் விஞ்ஞான ரீதியான ஆய்வுடைய சுயசிந்தனை வளர்ச்சி இருந்தமையே. மேலைநாட்டவர்கள் விஞ்ஞானத்தின் துணை கொண்டு விண்ணில் மனிதனைச்சஞ்சரிக்கின்ற அளவுக்கும், கண்ணாடிக்குழாயில் கர்ப்பம் தரிக்கச்செய்து புதிய மனிதசமுதாயத்தை உருவாக்கும் அளவுக்கும் முன்னேறியமைக்குக் காரணம் தன்னம்பிக்கை உள்ளவர்களாகவும் சுயசிந்தனையை வளர்க்கும் வழியுமே ஆகும்'' என இரு மணித்தியாலங்களாக உரையாற்றினார்.

தமிழகத்திலைச் சேர்ந்த திராவிடக்கழகத்தின் முழுநேரத்தொண்டரான திருமதி பார்வதி கணேசன்; ''உரையாற்ற நான் இங்குவரவில்லை பெரியாருக்கு எடுக்கப்படும் விழாவைக்காணவேவந்தேன்''

[5ம் பக்கம் பார்க்க]

## ஊழியர் மன்றங்கள்

தொழில் நிலையங்களில் ஊழியர் மன்றங்கள் நிறுவுவதற்கான சட்டமூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவிருப்பதாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அறிவித்திருக்கிறார்.

இந்த மன்றங்களை அமைப்பதன்மூலம் ஊழியர்கள் தொழில் நிலையங்களின் நிர்வாகத்தில் பங்கு கொள்ளவும் - ஊழியர்களுக்கும் நிர்வாகிகளுக்குமிடையில் ஏற்படும் பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளவும் வழிபிறக்கும் என்று கருதப்படுகின்றது.

தொழிலாளர் அல்லாதவர்களே தொழிற் சங்கங்களுக்குத் தலைமைவகிப்பதால் அரசியல் நோக்கங்களுக்கு இவர்கள் இவ்வியக்கங்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று கூறப்பட்டுவரும் பொதுவான குற்றச்சாட்டுகளுக்கு இந்த ஊழியர் மன்றங்கள் மூலம் முற்றுப்புள்ளிவைக்கப்படுமா என்பது தெரியவில்லை.

ஆனால், தொழிற் சங்கங்களையோ, வேலை நிறுத்தங்களையோ நசுக்குவது இந்தக் கட்டத்தின் நோக்கமில்லையென்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார் பெரும் எடுப்பில் வேலை நிறுத்தம் ஒன்று நடைபெறவிருந்து ஒத்திவைக்கப்பட்டிருக்கும் இந்த வேளையில் அரசு அவசரமாகக் கொண்டுவரவிருக்கும் இச்சட்டத்தின் முழு விபரங்களும் தெரிந்த பிறகே அதன் சாதக பாதகமான நிலைமைகள் பற்றி கருத்து வெளியிடுவது பொருத்தமாகும்.

எவ்வாறாயினும், நாட்டின் அபிவிருத்தி வேலைகள் குலைந்துபோகாமலும், தொழில் நிலையங்களில் உற்பத்தி தடைப்படாமலும் இருப்பதோடு, தொழிலாளர் உரிமைகளுக்கும், நலன்களுக்கும் குந்தகம் விளைவிக்காதவிதத்தில் புதிய சட்டம் அமையுமானால் அதற்கு மக்கள் ஆதரவு நிச்சயமாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

## மணிவாக்கு

விழ்த்தப்பட்ட எதிரியானவன் மீண்டும் எழுந்துவிடுவான். ஆனால் உடன்பாடு கொண்டுவிடும் எதிரியோ முற்றாக அழிக்கப்பட்டுவிடுகிறான்.

—ஸ்ச்சில்லர்.

## இன்று பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று மாலை நடைபெறுகின்றது.

மேற்படி கல்லூரிச் சதுக்கத்தில் நடைபெறும் இவ்விழாவில் பரிசளிப்பு உரையை இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாணவளாக வர்த்தக பொருளியல் பீடத்தலைவர் பேராசிரியர் செ. இராசரத்தினம் நிகழ்த்துவார். திருமதி கே. இராசரத்தினம் பரிசில்களை வழங்குவார். (கூ)

## இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 14-ந் திகதி

சனிக்கிழமை

(30-9-78)

**மேடம்:-** புண்ணிய காரியங்களில் மனம்நாடும். நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாவதற்கு இடமுண்டு. நண்பர்கள் புடைசூழ்வர். உற்சாகமானதினம்.

**இடபம்:-** இதயப் படுதாவில் இன்பத்தின் கூத்து. வெளியிடத்திலிருந்து வரவேற்கத்தக்க செய்தி கிடைக்கும். தொழில் துறையில் புதிய சந்திப்புகளுக்கு இடமேற்படும்.

**மிதுனம்:-** பொருள் வரவு திருப்திகரமாக இருக்கும். புத்திரவழியால் புகழுமுண்டு. புதிய உடன்படிக்கை யொன்றுக்கு இடமுண்டு. வணிகர்களாயின் வியாபாரத்துறையில் வெற்றிகிடைக்கும்.

**கடகம்:-** பழைய நினைவுகள் உங்களைக் கவலையில் ஆழ்த்தும். நம்பிக்கையின் மூலம் பொருள் விடயத்திற்தும் இடமேற்படும். விவசாயிகளாயின் இன்று சோதனையான கட்டம். நிதானம் வேண்டும்.

**சிங்கம்:-** ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு, குறுக்குவழிகளில் இறங்கவேண்டாம். வீட்டில் சிறு பிணிக்கும் இடமுண்டு. அடக்கம் வேண்டும்.

**கன்னி:-** பொறாமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவிசெய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்வீர்கள் அரசபயத்திற்கு இடமேற்படுமாகையால் வழக்கு விவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும்.

**துலாம்:-** தாய்வழித் தனவரவுக்கு இடமுண்டு. குடும்பத்தில் திருப்திகரமான சூழ்நிலை தென்படும். கல்வித்துறையில் அதிக ஆர்வம்பிறக்கும். இன்று நல்லதினம்.

**விருச்சிகம்:-** இதயங்கள் இணைவதற்கு இன்று நல்ல நாள். அபிப்பிராய பேதங்கள் மறைவதற்கிடமுண்டு. பந்துக்கள் ஆதரவு பெருகும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

**தனுசு:-** அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும். அறவழியில் ஆர்வம் பிறக்கும். ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும். இலட்சியவாதிகளுக்கு இன்று பொன்னான தினம்.

**மகரம்:-** கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும். வாகனம் செலுத்துவோர் அதிக நிதானத்துடன் இருக்கவும் தொழில் புரியும் இடத்தில் பொறுமை வேண்டும்.

**கும்பம்:-** வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் காணப்படும். இலட்சியவாதிகள் பூரிப்படைவர். குடும்பத்தில மகிழ்ச்சி தென்படும். மனநிறைவுக்கிடமுண்டு.

**மீனம்:-** முன்னேற்றத்தில் முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். முன்எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## யாழ். தொல்பொருள் காட்சிச்சாலை இடம்மாறுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொல்பொருட்காட்சிச்சாலை நாவலர் வீதியிலமைந்துள்ள ஆறுமுகநாவலர் கலாசார நிலையம் அமைக்கப்படவுள்ள இடத்துக்குப் பின்னால், அமைக்கப்பட்டுவரும் கட்டிடத்துக்கு இடம்மாற இருக்கின்றது.

தற்போது யாழ்ப்பாணம் தொல்பொருட் காட்சிச்சாலை யாழ், பிரதான வீதியிலுள்ள வாடகைக் கட்டிடமொன்றிலேயே இயங்கி வருகின்றது.

நாவலர் வீதியில் அமைக்கப்பட்டுவரும் தொல்பொருட் காட்சிச்சாலைக் கட்டிடத்துக்கு இதுவரை 2லட்சம் ரூபா அளவில் செலவிடப்பட்டுள்ளன. இக்கட்டிடம் பூர்த்தியாவதற்கு இன்னும் 2லட்சரூபா தேவைப்படுவதாக அறிய வருகின்றது.

கலாச்சார அமைச்சு தொல்பொருள் ஆராய்ச்சி இலாகாவினூடாக இக்கட்டிடத்தைக் கட்டிவருகின்றது. (கூ-உ)

### அக். 1 முதல் அமுலாகிறது

# அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு ஓராண்டு; ஏனையோருக்கு ஆறுமாதக் கடூழியம்!

## புதிய மதுவிலக்கு சட்டம் குறித்து எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை, செப். 29

மதுவிலக்கை - மீறிய குற்றவாளிகள் சாதாரணமானவர்களாக இருந்தால் அவர்களுக்கு ஆறுமாதக் கடூழியச் சிறைத்தண்டனையும் அவர்கள் மந்திரிகளாக அல்லது அரசாங்க அதிகாரிகளாக இருந்தால் ஒருவருடக் கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்படும், இந்தவகையில் திருத்தம்செய்யப்பட்டுள்ள மதுவிலக்குச் சட்டம் தமிழக அரசினால் அக்டோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வருகிறது என்று தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் முதலமைச்சர் இதனை அறிவித்தார்.

**ஏழை, பணக்காரன் பேதமில்லை**

இந்த மதுவிலக்கு திருத்தச் சட்டத்தின் முன் ஏழை-பணக்காரன், பெரியவர்-சிறியவர் என்ற எந்தப் பாகுபாட்டிற்கும் இடமில்லை என்று திரு. எம். ஜி. ஆர். ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

சட்டம் தேவையில்லை, நாம் மதுவுக்கு அடிமைப்படாத நல்லவர்கள் என்ற வகையில் மக்கள் நடந்துகொள்ளவேண்டும் என்று அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

குடியினால் வரும் தீமைகள் பற்றி குழந்தைகளுக்கு அறிவுறுத்தும்வகையில் தமிழக அரசு திரைப்படம் ஒன்றினைத் தயாரித்துத் திரையிடும் என்றும் முதலமைச்சர் சொன்னா. (உ)

## நியுயோர்க்கில் வாஜ்பாய்

நியுயோர்க், செப். 29

தற்போது வெளிநாட்டு விஜயம் மேற்கொண்டுள்ள பாரத வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாய் வாஷிங்டனில் வைத்து யூகோஸ்லேவிய, பங்களாதேஷ் வெளிநாட்டமைச்சர்களைச் சந்தித்து உரையாடினார். (உ)

## பொருளாதாரப் பற்றுக்குறை

வாஷிங்டன், செப். 29

உலக நாடுகளிடையே ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பற்றுக்குறை நிவர்த்திசெய்யப்படவேண்டியதன் அவசியம் குறித்து வாஷிங்டனில் கூடிய சர்வதேச நாணய நிதிச்சபையும் உலக வங்கியும் வலியுறுத்தியுள்ளன.

135 நாடுகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டன. (உ)

### அடுத்தமாதம் கோப்பாய்

## கட்டப்பிராய் குளம் புனரமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

''135 ஆண்டு பழமையான கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியின் பெரும்பாலான கட்டிடங்கள் இன்று இடிந்து விழுந்துபோதும் அபாயகரமான நிலையிலுள்ளன. அரசாங்க உதவிகள் பெற்றும் போதாமையால் கல்லூரியின் பெற்றார் ஆசிரியர் சங்கம் முன்னின்று நிதி திரட்டி கல்லூரியில் புதிய கட்டிடங்களை அமைத்தும் வருகின்றது. இவ்வாறு பெற்றார்-ஆசிரியர் சங்கம் கல்லூரி அபிவிருத்திக்குப் பாடுபடுவதோடு எமது கலைஞர்களின் சிறப்பையும் வெளிப்படுத்தி வைக்கின்ற பெரும் கலைப்பணியையும் மேற்கொண்டுள்ளது'' என யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிப் பெற்றார் ஆசிரிய சங்கத்தினரின் 'மயிலைக்குறவஞ்சி' நாட்டிய நாடக நிகழ்ச்சியின் போது நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துக் கல்லூரி அதிபர் திரு. சி. சிவநேசன் பேசுகையில் கூறினார். இக்கலை நிகழ்ச்சிக்கு தொழிலதிபர் திரு. க கனகராசாவும் திருமதி கனகராசாவும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டனர்.

**அழியாப் பெருஞ் செல்வம்**

திரு. க. கனகராசா பேசுகையில் கூறியதாவது:

''தானங்களில் சிறந்ததும் உலகில் அழியாப் பெருஞ் செல்வமுமான கல்வி நாட்டின் வளர்ச்சிக்கும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் அடிப்படையானது. ஒரு கிராமத்தின் வளர்ச்சி அக்கிராமத்தின் குளங்களின் மூலமும் கல்லூரிகளின் மூலமும் உருவாக்கப்படுகின்றது. இதே வழியில்

(5-ம் பக்கம் பார்க்க)

## சென்ட்டர் ஜாக்ஸன் கூற்று: சோவியத் அமைச்சர் மறுப்பு

மாஸ்கோ, செப். 29

சோவியத் எண்ணெய்க் கிணறுகளின் ஆழம் 1500—1800 மீட்டருக்கு அதிகமில்லை; அமெரிக்க துறப்பணக் கருவிகளை கொள்வனவு செய்வதன் மூலம் கிணறுகளை 15,000 அடி வரை தோண்ட மாஸ்கோ திட்டமிட்டுள்ளது என்று செனட்டர் ஹென்றி ஜக்ஸன் கூறியிருப்பது பிழையானது.

இவ்வாறு சோவியத் எண்ணெய் கைத்தொழிற்துறை பிரதி அமைச்சர் ஐந்தார் தாகோயேவ் கூறியுள்ளார்.

செனட்டர் ஜக்ஸன் அமெரிக்க செனட் சபையின் விசை இயற்கை வளங்கள் கமிட்டியின் தலைவராவார்.

அமெரிக்க கம்பனிகளிடமிருந்து துறப்பணக் கருவிகள் சோவியத் யூனியன் கொள்வனவு செய்வது சம்பந்தமாகவே இப் பிரச்னை எழும்பியுள்ளது பிரதியமைச்சர் மேலும் கூறியதாவது:

''சுதேசி உபகரணங்களை வைத்து சோவியத்நாடு பல தசாப்தங்களாக எண்ணெய்த் துறையை விருத்திசெய்துள்ளது. வட காக்கேஸஸ், அஸர்பைஜான் எண்ணெய்க் கிணறுகளில் ஆழம் 15,000 அடிக்கு மேல் சென்று எண்ணெய் இறைக்கிறார்கள். அதைவிட அதிக ஆழத்தில் கடலிலிருந்து எண்ணெய் தோண்டியெடுக்கப்படுகின்றது. அமெரிக்க எண்ணெய் துறப்பனவு கருவிக் கம்பனிகளுடன் சோவியத் யூனியன் வர்த்தகம் செய்வதை பிரமாதப்படுத்தத்தேவையில்லை. இது ஒரு சாதாரண வர்த்தக ஏற்பாடு.

ஒரு சாதாரண வர்த்தக விஷயத்தை வீரசியல் சண்டைட்டத்தில்பார்க்கஆரம்பித்தல் இரு நாடுகளுக்குமிடையில் வளர்ந்து வரும் வர்த்தகம் தடைப்பட்டுப் போகும்.

# ரஷ்யாவுடன் சுமுகநிலை காணப் பெரும் முயற்சி

## ஆயுதக்கட்டுப்பாடு பற்றி க்கார்ட்டர் கூறுகிறார்



வாஷிங்டன், செப். 29

அமெரிக்காவுக்கும் சோவியத்யூனியனுக்கும் இடையில் கேந்திர ஆயுதக்கட்டுப்பாடு தொடர்பாக நிலவரும் கருத்து வேறுபாடுகளை நீக்க பெருமுயற்சி எடுக்கப்பட்டு வருகிறது என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டா தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டுக்குள் இது தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்தாவதில் தடையிருக்காது என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதேவேளை வாஷிங்டனில் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் சைரஸ்வான்சும் சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. குறொமிக்கோவும் நேற்று சந்தித்து 4 மணித்தியாலங்கள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

திரு. குறொமிக்கோ ஜனாதிபதி திரு. கார்ட்டரையும் சந்தித்து உரையாடுவார். என்றும் தெரிவிக்கப்பட்டது.

## லொறி விபத்தில் மாணவன் படுகாயம்

(மாவிட்டபுரம்)

வீதியால் சென்ற லொறி ஒன்று அவ்வீதியால் சென்ற பள்ளிமாணவன் ஒருவனை மோதிப் படுகாயத்திற்குள்ளாக்கிய சம்பவம் ஒன்று மாவிட்டபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

மாவிட்டபுரம் காங்கேசன்துறை பிரதான வீதியில் வந்துகொண்டிருந்த லொறி ஒன்று திடீரெனக் குறுக்கே பாய்ந்து வேலிக்குள் சென்றபோது அவ்வழியால் வந்த பொன்னுத்துரை ஜெபரஞ்சன் என்ற பள்ளிமாணவன் அதனுள் சிக்குண்டு படுகாயத்திற்குள்ளானார். காயமடைந்த பள்ளி மாணவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். லொறியும் சாரதியும்விசாரணையின் பின் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

## எஸ். டி. கேள்வி

(கொழும்பு)

கடந்த மூன்றும் மாதம் இந்தியாவுக்கு யாத்திரை சென்று சென்னை மகாபோதி சங்கத்தின் யாத்திரீகர் தங்குமடத்தில் காலமான திருமதி எஸ். ரொசலின் பெரேரா என்பவரின் மரணம் தொடர்பாக கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் பிரதி பாதுகாப்பு அமைச்சரிடம் கேள்வியொன்றைக் கேட்கவிருக்கின்றார். சென்னையில் இம் மரணம் தொடர்பாக நடத்தப்பட்ட ஆரம்ப மரண விசாரணையிலும் சடலம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதின் பின் களுபோவில ஆஸ்பத்திரியில் நடத்தப்பட்ட மரணவிசாரணை அறிக்கையிலும் முரண்பாடுகள் காணப்படுகின்றனவாவென்றும், அவ்வாறாயின் அம் முரண்பாடுகள் என்னவென்றும் திரு. பண்டாரநாயகா கேட்டிருக்கிறார்.

# எகிப்தும், இஸ்ரேலும் மீண்டும் சந்திக்கும்

## இஸ்ரேலிய மந்திரி ராஜினமா: பாராளுமன்ற முடிவின் எதிரொலி

கெய்ரோ, செப். 29

எகிப்தும், இஸ்ரேலும் மத்திய கிழக்குப் பிரச்னை சமாதான உடன்படிக்கை தொடர்பாக அடுத்த புதன்கிழமை அல்லது வியாழக்கிழமை மீண்டும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவில் இச்சந்திப்பு நிகழ விருப்பினும் இதில் அமெரிக்கா பெரும்பங்கை வகிக்குமென கெய்ரோ அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

ஆக்கிரமிப்பு நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட பகுதியிலிருந்து இஸ்ரேலியத் துருப்புகள் வெளியேறுதல் இப்பகுதியில் ஐ. நா. துருப்புகளை நிறுத்துதல் முதலான விடயங்கள் குறித்து இச்சந்திப்பின் போது முக்கியமாக ஆராயப்படும் எனத்தெரிகிறது.

இத இவ்வாறு இருக்க, மத்திய கிழக்குப் பிரச்னை தொடர்பாக காம்ப்டேவிட்டில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை இஸ்ரேலியப் பாராளுமன்றம் அங்கீகரித்தனையடுத்து இஸ்ரேலியக் கைத்தொழில் அமைச்சர் திரு. ஹெரோயிஸ் தமது பதவியை ராஜினமார்ச் செய்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (உ)

## நேர்முகப் பரீட்சை

(மட்டுவில்)

சாவகச்சேரி மாவட்டத்தில் வேலைவங்கிப் படிவங்கள் பூர்த்தி செய்து கொடுத்த வாலிபர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்றது.


தென்மராட்சிப்பிரிவு உதவி அரசாங்கஅதிபர் திரு. எஸ். முருகவேள் தலைமையில் இந்த நேர்முகப்பரீட்சை அவரின் காரியாலயத்தில் நடைபெற்றது. (உ)

## இன்று திறப்பு விழா

# அயராமுயற்சியின் சின்னம்

## தொண்டைமானாறு ஆய்வுநிலையம்

-- ஒரு விஞ்ஞான மாணவன் --



தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினர் நிறுவியுள்ள புதிய கட்டிடம் இன்று திறந்துவைக்கப்படுகிறது. மேல்மாடியிலுள்ள மகாநாட்டு மண்டபத்தை மேலதிகக் கல்விமா அதிபதி திரு. மகாதந்திலவும், நிலத்தளத்தில் அமைந்துள்ள வதிவிட இல்லத்தை எதிர்க்கட்சியின் பிரதித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரமும் திறந்துவைக்கின்றனர்.

தொண்டைமானாறுஎன்ற பெயர், இலங்கையில் மட்டுமன்றி அறிவியலிலும், வெளிக்கள ஆய்விலும் ஆர்வம் மிக்க மக்கள் வாழும் நாடுகளிலெல்லாம் பெருமைபெற்று விளங்குகிறது. இதற்குக் காரணம், இங்கு அமைந்துள்ள 'வெளிக்கள நிலைய.மாகும். இந்நிலையம் பத்து ஆண்டுகளுக்கு முன் 1968இல் தொண்டைமானாற்றுக் கடலேரியில் நீர்-உயிரியல் ஆய்வு மேற்கொண்ட அறிஞர்களுட் சிலரால் ஆரம்பிக்கப்பட்டது. இம்முன்னோடிகள். தொண்டைமானாற்றுக்குக் குறுக்கே அணைகட்டி, உப்புநீரை நன்னீராக்கும் திட்டத்தின் விளைவை அறிந்து மீனவர்கள், விவசாயிகள் ஆகியோருக்கு வழிகாட்டும் சமூக நல நோக்குடன் பணியாற்றினர். பல்வேறு திணைக்களங்களது ஆலோசனையைப் பெற்று, யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளிலுள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைச் சூழலில் ஆய்வை மேற்கொள்ளுமாறு தூண்டி, அவர்களோடு இணைந்து செயற்பட்டனர் இந்த ஆய்வுகளின்பேருக கடல் நீரேரியையும் அதன் சுற்றுப்புறத்தையும் பற்றி அரிய தகவல்களைப் பெற்றனர். இவற்றைப் பத்திரிகைகள் வாயிலாகவும் அறிவியல் ஆய்வரங்குகள் மூலமும் வெளியிட்டுவந்தனர்.

### ஆசியா பவுண்டேசன் நிதி உதவி

ஆர்வமும் தன்னம்பிக்கையும் நாட்டுப்பற்றும் கொண்ட இவர்களின் தனித்துவமான ஆய்வு சர்வதேசப்புகழ்பெற்றது. இதன்பயனுக இவற்றை வெளியிட ஆசியா பவுண்டேசன் நிறுவனம் பெருநிதி வழங்கியது. பெரும்பாலும் ஆசிரியர்களான தனிநபர்கள் சிலரைக்கொண்ட ஓர் அமைப்பின் பணி என்ற வகையில் இது ஒரு பெரிய சாதனையே.

ஆசியா பவுண்டேசன் நிறுவனம் வழங்கிய கண்ணுடி-இழை வள்ளமொன்றையும் தருணத்திற்கேற்ற வையாக அமைக்கப்பட்ட சில ஆய்கருவிகளையும், கல்வித்திணைக்களமும், பிறதொடர்புள்ள திணைக்களங்களும் வழங்கிய இரசாயனப் பொருள்களையும் பாடசாலை மாணவருக்கான சில ஆய்கருவிகளையும் அவற்றை வைப்பதற்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தரப்பட்ட ஓர் அறையையும் கொண்டே அறிஞர்கள் போற்றும் இந்தஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

### திருப்புமுனை

இந்த நிலையில் ஆய்வை மேற்கொள்வதற்கான சொந்தமான நிலையமொன்றை நிறுவவேண்டிய அவசியத்தை இவர்கள் உணர்ந்துகொண்டனர். இதற்காகத் தொண்டைமானாற்றின் மேற்குக் கரையில் உள்ள நிலத்தை, நீண்டகாலக் குத்தகையாகப் பெற்றுக்கொண்டனர் ஆய்வுகூடம், நூலகம், களஞ்சியம் ஆகியவற்றைக் கொண்ட கட்டிடத்தை அமைக்கக்கூடிய நிதி வாய்ப்பு அவர்களிடம் இருக்கவில்லை பெருநிதி வழங்கக்கூடிய வாய்ப்பும் அவர்களுக்கு இருக்கவில்லை. ஆனல் அவர்களிடம் தன்னம்பிக்கை மட்டும் இருந்தது. அவர்கள்

(6ம் பக்கம் பார்க்க)

### கட்டப்பிராய்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கோப்பாய்க்கிராமத்தின் மத்தியில் ஒரு பெரும்பழமையான கல்லூரியாக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி இருந்து பல கல்விமான்களையும் உருவாக்கிய பெருமையைப் பெறுகின்றது. அதேபோல் இக்கிராமத்தில் பல குளங்கள் இருந்து கிராமத்து மக்களின் பயிர் வளத்திற்கு உதவி,பசிப்பிணியைப்போக்கியுள்ளன. கிறிஸ்தவக் கல்லூரியை அபிவிருத்திசெய்வதற்கு நிதி உதவி அளிப்பது போல் கோப்பாய் கிராமத்தில் இன்று உள்ள குளங்களில் ஒன்ருன சட்டைப்பிராய்க் குளத்தை அடுத்தமாதம் முதலம் திகதி இக்கலூரி மாணவர்களும் ஆசிரியர்களும, கிராமத்து மக்களும் என்னேடு சேர்ந்து புனரைப்புச் செய்ய உறுதியளித்துள்ளார்கள். ஒருகிராமத்தின் தன்நிறைவு அக்கிராமத்தின் நீர் வளம் பேணி நிலத்தைப்பயன்படுத்துவதிலும் கல்வியிலுமே தங்கியுள்ளது.''

பிரதம விருந்தினர் திரு. கனகராசாவிற்கு கல்லூரியின் பெற்ருர்-ஆசிரியர் சங்கத்தின் சார்பில் பாராட்டுப் பத்திரம் கல்லூரியின் தமிழ்த் துறைப் பொறுப்பாளர் பண்டிதர் திரு. செ. நடராசாவிஞல் வாசித்து அளிக்கப்பட்டது. பெற்ருர்-ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் திரு. அழகரத்தினம் நன்றியுரை கூறினர்.

இக்கலை நிகழ்ச்சிக்கு திருமதி ஞானமணி செல்லையா நட்டுவாங்கம் செய்தார். 'மயிலைக் குறவஞ்சி' நாட்டிய நாடகத்தில் கற்பக வல்லியாக செல்வி அருந்ததி அமிர்தலிங்கமும், மயிலைக் குறவஞ்சியாக செல்வி ஜெயசிக்கா விஜயரத்தினமும் பங்குபற்றி நடித்தார்கள். கலைநிகழ்ச்சியின் ஆரம்பத்தில் செல்வி அருந்ததி அமிர்தலிங்கத்தின் பரதநாட்டியமும் இடம்பெற்றது. (ஊ-அ)

### மனித...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கூறி பெரியாரைப் பற்றி

''ஐயா பிறந்தார்,
அறிவு தெளிந்த அவரால்
தமிழர் வாழ்வு சிறந்தது
கடவுள் இனிஏது? கடமை
தனை நீ ஓது.'

என்னும் பாடலைப்பாடி திரண்டிருந்த மக்களை மகிழ்ச்சி அடையவைத்தார்.

### எதிர்க்கட்சித் தலைவர் வாழ்த்து

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் இதுவரை நன்ருக ஆராயப்படாத ஒரு துறையிலே தலைசிறந்த விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. எமது பிரதேசத்தை நன்கு விருத்தி செய்ய இங்குள்ள நீர் மூல வளம், கடல்வளம் கனி வளம் முதலியன ஆராயப்பட வேண்டிய நிலையில் உள்ளன. கடந்தபத்தாண்டுகள் திருப்திகரமாகச் செயற்பட்டு வரும் இந்நிலையம், தனது பத்தாண்டு நிறைவுவிழாவை கொண்டாடுவதோடு இருப்பிட வசதியையும் மாநாட்டு மண்டபத்தையும் கொண்ட புதிய கட்டிடத்திறப்பு விழாவையும் நடத்த முடிவுசெய்திருப்பது குறித்து நான் மகிழ்கிறேன். இந்த நிலையம் யாழ்ப்பாணக் குடாநாட்டினதும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதிகளினதும் அபிவிருத்திக்குப் பயனுள்ள சேவை ஆற்றிப் பல்லாண்டு வாழவாழ்த்துகிறேன்.

இவ்வாறு தொண்டைமானாறு வெளிக்கள நிலையத் திறப்பு விழா இன்று நடைபெறுவதை யொட்டி எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### வடமாநில வித்தியாதிபதி செய்தி

தொண்டைமனறு வெளிக்கள நிலையத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றிய மேலதிகக் கல்விமா அதிபதி திரு. டபிள்யு. டி. ஸி. மகாதந்திலவினல் இன்று திறந்துவைக்கப்படவிருக்கும் மகாநாட்டு மண்டபமே ஆர்வமும் சக்தியும் வாய்ந்த இளைய முன்னேடி உழைப்பாளர்களின் பணிக்குச் சிறந்த பாராட்டுரையாகும். இப்பிரதேசத்தின் தேசியப் பிரச்னைகள் குறித்து ஆசிரியர்களும், மாணவர்களும் ஆராய்வதற்கான புதிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துவரும் நிலைய அலுவலர்கள் பாராட்டப்படவேண்டியவர்களே'' என்று வடமாநிலக் கல்வியதிபதி திரு. தி, மாணிக்கவாசகர் தமது வாழ்த்துரையில் தெரிவித்துள்ளார்.

மேலதிகக்கல்விமா அதிபரும் வெளிக்கள நிலையமுன்னுள் காப்பாளருமான திரு. டபிள்யு. டி. ஸி. மகாதந்திலவும் வாழ்த்துச் செய்திஅனுப்பிவைத்துள்ளார்.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
ஜெய்சங்கர்—ஜெய்சித்திரா
உங்கள்விருப்பம்

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 4-45, 7-15, 10-00
ஜெமினி-பத்மினி
மீண்டசொர்கம்

வின்ஸர் போன்: 466 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர்.-முத்துராமன்
ஜெயலலிதா-சோ
நடித்த
ஒரு தாய் மக்கள்
(புதிய பிரதி)

REGAL (Jaffna) Phone: 360
Daily 4-30, 7-00,& 9-30 p.m.
Glendo Jackson, Oliver Reed in
THE TRIPLE ECHO
(Color-adu ts only)

தினசரி 4 காட்சிகள் 137-வது தினமாக
ராணி சிவாஜி-மஞ்சுளா
(யாழ். நகர்) நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி,ஞாயிறு 4 காட்சிகள்
ஆலயமணி
(புதியபிரதி)

லிடோ போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்) தங்கத்திலே வைரம்

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) ஜெமினி-சாவித்திரி
நடித்த
கொஞ்சும் சலங்கை
(ஈஸ்ட்மன்கலர்) [புத்தம்புதிய பிரதி]

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
∴ ஜெமினி ∴ சரோஜாதேவி
∴ வாணிஸ்ரீ ∴ நாகேஷ்
நடித்த
தாமரை நெஞ்சம்
(புத்தம்புதிய பிரதி)

சாந்தி போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ்ப்பாணம்) நாகேஷ்...ராஜஸ்ரீ... முத்துராமன்
(இரு வேடங்கள்) K. பாலசந்தரின்
அனுபவி ராஜா அனுபவி
(புதிய பிரதி)
2 முதல் புதிய பிரதியாக புதுப்பொலிவுடன்
புரட்சி நடிகரின் அரச கட்டளை

5-10-78 வரை மட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் சிவாஜிகணேசன் கிரிஜா-கண்ணம்மா
T. R. ராஜகுமாரி S. A. நடராஜன் நடித்த
மனோகரா
(புத்தம் புதிய பிரதி)

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
BOMB AT 10.10
(warfilm)

## அயரா...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

நிதி திரட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். தனிநபர்களான இந்தச் சிலரே ஒவ்வொரு சதமாகத் திரட்டினர். கலை நிகழ்ச்சிகள், பொருட்காட்சிகள் முதலியவற்றின் மூலம் திரட்டப்பட்ட நிதியில் 1971ம் ஆண்டுபலநோக்குக் கட்டிடம் ஒன்றுஅமைக்கப்பட்டது. இக் கட்டிட அமைப்பு நிலைய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. பலரும் இதன்பாற் கவரப்பட்டனர்.

இதன் பேருக, மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான பயிற்சி முகாம்கள் நடாத்தப்பட்டன. பாடவிதானத்துக்குட்பட்ட விடயங்களுக்கு இடமளிக்கப்பட்ட போதிலும் அறிவியல் ஆய்வு நெறியிற் பயிற்சியளிப்பதும் சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கான ஆய்வில் நாட்டம் கொள்ளச் செய்வதும் முக்கிய் இடம்பெற்றன.

சமூகத்தின் அன்ருட வாழ்க்கைப் பிரச்னைகளைப் பற்றி ம்க்களோடு கலந்து ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகாண மேற்கொள்ளப்படும் முயற்சியும் இதற்காக மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள ஆய்வும் ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான கலாசார நிறுவனத்தின் ஓர்அங்கமான ஐ.லி.லி. நிறுவனத்தின் கவனத்தைப் பெற்றன. இதன் பேருக தொண்டைமானுறு வெளிக்கள நிலையத்திற்கு ஐ. லி. லி. நிறுவனத்தின் உறுப்புரிமை கிடைத்தது. 1974ம் ஆண்டு ஐ. லி. லி. நிறுவனம் நடாத்திய ஆசிய இளைஞர்க்கான விஞ்ஞான முகாமை, தொண்டைமானுற்றில் அது நடாத்தியது. 1974 ஆகஸ்ட் 5ம் திகதி முதல் 10ம் திகதி வரை நடைபெற்ற இம்முகாம்' இளைஞரும் சூழலும்; பசுமைப் புரட்சி' என்ற பொருளில் நடாத்தப்பட்டது. இலங்கையில் யாழ்ப்பாணம், மன்னர், வவனியா, கண்டி, கொழும்பு, திருமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து 72 பேரும் இந்தியா, தாய்லாந்து, ஈராக் ஆகிய நாடுகளிலிருந்து 13 பேரும் இம் முகாமில் பங்குபற்றினர். ஐ. லி. லி. நிறுவனத்துணைத் தலைவரும் அணு விஞ்ஞானியுமான திரு. ஏ. எம். கோஷ் அவர்கள் இதில் கலந்துகொண்டார். இந்நிகழ்ச்சி பற்றிய அறிக்கை யுனெஸ்கோவின் இளைஞர் விஞ்ஞானப் பிரிவின் உதவியோடு ஐ. லி. லி. ஆசிய செயலக நூலில் வெளியிடப்பட்டது.

### கொலை - கொள்ளை - கார் கடத்தல்

# சந்தேகநபர் மீது 6 குற்றச்சாட்டு!

## சட்ட வைத்திய பரிசோதனை நடத்துமாறு நீதிபதிஉத்தரவு

[மாவிட்டபுரம்]

ஆறு குற்றச்சாட்டுகளின் பேரில் சங்கானைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மல்லாகம் நீதிபதியால் றிமாண்டில் வைக்கப்பட்டு அவரை சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிடப்பட்டது.

வடபகுதியில் இடம்பெற்ற பலவேறு கொலை, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு ரயிலில் கொழும்புக்கு கொண்டு சென்றபோது ரயிலிலிருந்து பாய்ந்து தப்பியோடிய அளவெட்டியைச் சேர்ந்த சரவணமுத்து சற்குணசிங்கம் என்பவரை சங்கானைப் பொலிசார் அளவெட்டியில் வைத்து கைதுசெய்திருந்தனர். இவரிடமிருந்து துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டது.

இவரை மல்லாகம் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை ஆஜர்செய்தபோது சங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனுப் மிஸ்கின் இரகசியத்தகவலின் பேரில் இவரைத் தாம் கைது செய்யச் சென்றபோது அவர் ஓட முற்பட்டதாகவும், பொலிசார் அவரைத் துரத்திச் சென்றபோது கோடரியால் இரு பொலிசாரைத் தாக்கிவிட்டு தம்மையும் கோடரியால் வெட்டவந்ததாகவும் தமது பாதுகாப்புக் கருதி அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து துரத்திப் பிடித்ததாகவும் கூறினர்.

இவர் மீது ஆறு குற்றச்சாட்டுகளையும் அவர் சுமத்தினர்.

இளவாலையைச் சேர்ந்த எஸ். ஏ. இம்மானுவேல் என்பவரை 20-8-77ல் சுட்டுக் கொலைசெய்தது.

சுன்னுகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி ஆசிரியர்களது சம்பளப் பணம் 34 ஆயிரத்து 624 ரூபாய் 25 சதத்தை 21-10-77ல் கொள்ளையடித்தது.

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தீப்பெட்டித் தொழிற்சாலையிலிருந்து 4600 ரூபா வெடிமருந்துகளை 8-8-77ல் கொள்ளையடித்தது.

இளவாலையைச் சேர்ந்த ஈ. ஜே. பொன்னையா என்பவரது வீட்டில் 4-11-77ல் நகைகள் உட்பட 4075 ரூபாவைக் கொள்ளையடித்தது.

விளானைச்சேர்ந்த கே. இரத்தினம் என்பவரது 27 ஆயிரம் ரூபா பெறுமதியான காரை 3-9-77ல் கொள்ளையடித்தது.

சட்டத்தரணி எஸ். இளையதம்பியின் துப்பாக்கியை 26-8-77ல் அபகரித்தது.

மேற்படி குற்றங்களின் பேரில் இவரைக் கைது செய்ததாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டதையடுத்து சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம்; "சந்தேக நபரை பொலிசார் கடுமையாகத் தாக்கியிருக்கிருர்கள். அவரைக் கைதுசெய்வதற்காக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக பொலிசார் கூறுவது பொய். அவனைக் கைது செய்தபின்னரே அவரது காலில் பொலிசார் சுட்டிருக்கிருர்கள். இதற்குச் சாட்சிகள் உண்டு. அதுமட்டுமன்றி அவர் அணிந்திருந்த சாரத்தையே பிடுங்கி அவரது கைகளைக் கட்டியிருக்கிருர்கள். அவர் உடை எதுவும் இல்லாத நிலையில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு கொண்டு போனதற்கு சாட்சியங்கள் உண்டு. பொலிசார் இவ்வாறு மனிதாபிமானமற்று நடப்பதைபிட்டு நீதிபதி கவனத்திலெடுக்க வேண்டுமென்பதற்காகவே இவற்றைக் கூறுகின்றேன். சந்தேக நபரை சட்ட வைத்திய பரிசோதனைக்குட்படுத்துமாறு நான் விண்ணப்பிக்கின்றேன்" என்ருர்.

இதையடுத்து சந்தேகநபரை அடுத்தமாதம் 10ம் திகதி வரை றிமாண்டில் வைத்து அவரை சட்ட வைத்திய அதிகாரியின் வைத்திய பரிசோதனைக்குட்படுத்துமாறு சிறை அதிகாரிகளுக்கு நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி உத்தரவிட்டார்.

இச் சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு, சட்டத்தரணி எஸ். புண்ணியமூர்த்தி ஆகியோர் ஆஜராகினர்.

பொலிஸ் தரப்பில் சங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனுப் மிஸ்சின் ஆஜரானுர்.

ஏராளமானேர் இச் சந்தேகநபர் ஆஜர்செய்யப்படுவதைப்பார்க்க நீதிமன்றத்தில் கூடியிருந்தனர்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

அமரர்கள்வன்னியசிங்கம்-நாகநாதன் நினைவுதினவிழா இன்று மாலை கோண்டாவில் காளிகோவில் முன்றலில் நடைபெறவிருக்கிறது.

பண்டிதர் நா. இராசையா தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி.க்களும், பிரமுகர்களும் உரைநிகழ்த்துவர். (செ)

ஃ ஃ ஃ

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கருத்தரங்குகள் இன்று பிற்பகல் வரணியிலும், இரவு உசனிலும் நடைபெறவிருக்கிறது.

இக்கருத்தரங்கில் தமிழ் காங்கிரஸ்தலைவர் திரு.ரி. சங்கரப்பிள்ளை, பொதுச்செயலாளர் திரு. ஜி.ஜி.பொன்னம்பலம், திரு. ஆனந்தராசா, திரு.ரி.மகேந்திரராசா ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள். (க)

## ஆண்டு விழா

(சித்தன்கேணி)

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் 22 வது ஆண்டு நிறைவு விழா இன்று மாலை நடைபெறுகிறது.

கழகத் தலைவர் செல்வன் தெ.மனோகரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். லயன்ஸ் கிளப் தலைவர் லயன் எஸ். ராஜேந்திரா. பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## விக்னேஸ்வரா ச.ச. நிலையஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூகநிலையத்தின் 30வது ஆண்டு விழா இன்று சனிக்கிழமைநடைபெறவிருக்கிறது.

திரு. ந. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில், இக்கிராமத்தைச் சேர்ந்த இசைக்கலைஞர் திரு. கதிர். சுந்தரலிங்கம் கௌரவிக்கப்படவிருக்கிருர். இவருக்குப் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் பண்டிதர் க. சச்சிதானந்தம் பட்டமளித்துப் பாராட்ட, தொழிலதிபர் திரு. க. கனகராசா பொன்னுடை போர்த்திக் கௌரவிப்பார்.

மானிப்பாய் எம், பி. திரு. வி. தர்மலிங்கம், செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு. வ. பொன்னம்பலம், வித்துவான் சி. ஆறுமுகம், வடபகுதிக் கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. ஆ. மகாலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர் கவிமணி வி. கந்தவனம் தலைமையில் கவியரங்கும் நடைபெறும்.

## கூட்டுறவு ஊழியர் ஆண்டுக்கூட்டம் இன்று

[யாழ்ப்பாணம்]

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம், இன்று காலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

தலைவர் திரு. சி. க. திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் மன்னர், வவனியா, யாழ்ப்பாணம் மாவட்ட அங்கத்தவர்களும் கலந்துகொள்வார்கள்.

## மாங்குளம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

முல்லைத்திவு மாவட்ட நீதிபதி திரு. வி. பி. சுந்தரலிங்கம் இதன் விசாரணையை அக்டோபர் 31ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், தீர்ப்பு அன்றையதினம் வழங்கப்படும் என்றும் , தெரிவித்தார்.

## தவறிவிட்டது

பேஜோ வானுடைய 'செல்' யாழ்ப்பாணத்துக்கும் வேலணைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். சிவபாதம், ரயர் கடை, 70, கே. கே, எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0464


# பிரதி ஒன்று 1/- ரூபாய் மட்டுமே

உறுதிகள் சான்றிதழ்கள் ஏனைய பத்திரங்கள்

ஒரே நிமிடத்தில்

# போட்டோ கொப்பிகள்

செய்து தரப்படும்.

தொடர்புகொள்ளவும்:

# த பினன்ஸ் கொம்பனி லிமிட்டட்

தொலைபேசி எண்: 7680 191, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No 49, Telegram Eelanadu, - Jaffna - Telephone: 389 - Registered as a News paper in Sri Lanka.